සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2024
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2024
General Certificate of Education (Adv. Level) Examination, 2024

දෙමළ I
தமிழ் I
Tamil I

**72 T I**

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
*Three hours*

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடம்
Additional Reading Time - 10 minutes

வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

**அறிவுறுத்தல்கள் :**

※ பகுதி **I** இல் உள்ள இரு வினாக்களுக்கும் பகுதி **II** இல் உள்ளவற்றுள் எவையேனும் மூன்று வினாக்களுக்கும் - எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு - விடை எழுதுக.

## பகுதி I

1. மேல்வரும் செய்யுள்களை வாசித்து அவற்றின்கீழ் உள்ள வினாக்களுக்கு விடை தருக.

(அ) இளமை பாரார் வளநசைஇச் சென்றோர்
இவணும் வாரா ரெவண ரோவெனப்
பெயல்புறந் தந்த பூங்கொடி முல்லைத்
தொகுமுகை யிலங்கெயி றாக
நகுமே தோழி நறுந்தண் காரே.

(i) தலைவனுடைய செயல் ஏன் நகைப்புக்குரியதாகிறது?
(ii) இந்த அகத்திணைச் செய்யுளில் முதல், கரு, உரிப் பொருள்கள் வெளிப்படும் வகையினைத் தெளிவுறுத்துக.
(iii) இங்கு கையாளப்பட்டுள்ள அணியில் நீர் காணும் நயத்தினை விளக்குக.

(ஆ) அவ்விடை யண்ண றானு மன்றரும் பொடியின் வைகித்
தெவ்விடை தரநின் றார்க்குஞ் செறிகழற் புளிஞர் கோமான்
இவ்விடைக் கங்கை யாற்றி னேற்றினை யாயி னெம்மை
வெவ்விடர்க் கடனின் றேற்றி வேந்தன்பால் விடுத்த தென்றான்

(i) இச்செய்யுளில் விபரிக்கப்படும் சந்தர்ப்பம் யாது?
(ii) இதில் பரதனது அருங்குணமும் குகனது வீரமும் எவ்வெவ்வாறு வெளிப்படுகின்றன?
(iii) இதில் பயின்றுள்ள அணியை இனங்கண்டு விளக்குக.

(12 + 12 = 24 புள்ளிகள்)

[பக். 2 ஐப் பார்க்க

2. (அ) பகுதியிலுள்ள கவிதையைப் படித்து அதன்கீழ் உள்ள வினாக்களுக்கு விடை தருக.

**அல்லது**

(ஆ) பகுதியிலுள்ள உரைப்பகுதியைப் படித்து அதன்கீழ் உள்ள வினாக்களுக்கு விடை தருக.

(அ)

மானிடத் தன்மையைக் கொண்டு - பலர்
வையத்தை ஆள்வது நாம் கண்டதுண்டு
மானிடத் தன்மையை நம்பி - அதன்
வன்மையினாற் புவி வாழ்வு கொள் தம்பி
மானிடம் என்றொரு வாளும் - அதை
வசத்தில் அடைந்திட்ட உன் இரு தோளும்
வானும் வசப்பட வைக்கும் - இதில்
வைத்திடும் நம்பிக்கை வாழ்வைப் பெருக்கும். (மானிட)

மானிடன் வாழ்ந்த வரைக்கும் - இந்த
வையத்திலே அவன் செய்த வரைக்கும்
மானிடத் தன்மைக்கு வேறாய் - ஒரு
வல்லமை கேட்டிருந்தால் அதைக் கூறாய்
மானிடம் என்பது புல்லோ - அன்றி
மரக்கட்டையைக் குறித்திட வந்த சொல்லோ
கானிடை வாழ்ந்ததும் உண்டு - பின்பு
கடலை வசப்படச் செய்ததும் அதுதான். (மானிட)

மானிடம் போற்ற மறுக்கும் - ஒரு
மானிடம் தன்னைத் தன் உயிரும் வெறுக்கும்
மானிடம் என்பது குன்று - தனில்
வாய்த்த சமத்துவ உச்சியில் நின்று
மானிடருக் கினிதாக - இங்கு
வாய்த்த பகுத்தறிவாம் விழியாலே
வான்திசை எங்கணும் நீபார் - வாழ்வின்
வல்லமை மானிடத் தன்மை - என்றே தேர் (மானிட)

(i) வானையும் வசப்படச் செய்யும் வல்லமை மனிதனுக்கு எவற்றால் வாய்க்கிறது?

(ii) 'கானிடை வாழ்ந்ததும் உண்டு - பின்பு கடலை வசப்படச் செய்ததும் அதுதான்' என்ற அடிகள் மூலம் கவிஞர் கூறமுற்படும் விடயம் யாது?

(iii) தாம் வினவும் வினாக்கள் மூலம் கவிஞர் உணர்த்த முற்படும் விடயங்கள் யாவை?

(iv) இக் கவிதையில் 'உருவக அணி' இடம்பெற்றுள்ள தொடர்களை இனங்கண்டு, அவற்றில் நீர் காணும் நயங்களை விபரிக்குக.

**அல்லது**

(ஆ) தெருப்படலையைத் தாண்டி வெண் மணலில் இறங்கித் தன் மாமனார் வீட்டை நோக்கி நடந்தான் தாமோதரம். ஆலங்கேணிக் கிராமத்தின் விரல்விட்டு எண்ணக்கூடிய ஓட்டு வீடுகளில் அவரது வீடும் ஒன்று. இரண்டு அறைகளும், ஒரு பூஜையறையும், வீட்டின் முன்னால் விசாலமான விறாந்தையும் கொண்ட அவ்வீட்டுக்குச் செல்லும் வழியில் ஒரு பாகம் அகலமான மணற்பாதையின் இரு மருங்கிலும் செங்கற்கள் நடப்பட்டுச் சுண்ணாம்பு தீட்டப் பெற்றிருந்தது. கற்களுக்குப் பின்னால் கிராமத்தவரால் 'கானல் வாழை' என்றழைக்கப்படும் கனாஸ் செடிகள் மஞ்சளும் சிவப்புமாகப் பூத்திருந்தன. அவற்றினிடையே சமமான இடைவெளிகளில் குறோட்டன்கள் பல்வேறு நிறங்களிலும் இரு பக்கமும் அணிவகுத்து நின்றன. விறாந்தைக்கு முன்னால் பென்னம்பெரிய பந்தலில் கொடி மல்லிகை படர்ந்திருந்தது. மல்லிகைப் பூக்களின் சுகந்தம் மனதுள் ஒரு கிளர்ச்சியை உண்டாக்கிக் கொண்டிருந்தது.

வீட்டினுள்ளே சந்தடியைக் காணவில்லை. அரைச்சுவருக்கு மேலே மரக்கிராதிகள் அடிக்கப்பட்ட விறாந்தையின் முன்கதவு மூடப்பட்டிருந்தது. தாமோதரம் பூந்தோட்டப் பாதை வழியே நடந்து மல்லிகைப் பந்தலை அண்மியபோது சௌந்தரம் மண்குடத்தை இடுப்பில் வைத்துத் தண்ணீர்

Downloaded from 'Past Papers Wiki' - Web: www.pastpapers.wiki

3 ஐப் பார்க்க

சுமந்துகொண்டு வந்தாள். வரும் வழியிலிருந்த குறோட்டன்களிலும் கனாஸ்களிலும் இருந்து நீர் சொட்டிக் கொண்டிருப்பதைப் போல அவள் பாவாடையிலும் கைகளிலும் கூட நீர் சொட்டிக் கொண்டிருந்தது. வைகறையின் குளுமையில் வெண்பனி தோய்ந்து இளநகை சிந்தி அரும்பிக் கொண்டிருக்கும் மல்லிகையைப் போலவே அவள் தோற்றமளித்தாள்.

மானாக வெருண்டு தாமோதரத்தைக் கண்டதும் அவள், ஓடி விடுவோமோ என்று நினைத்து எப்படியோ சுதாகரித்துக் கொண்டு தான் சுமந்துவந்த தண்ணீர்க் குடத்தைப் பயந்து போனவள் போல மல்லிகையின் அடியில் சரித்தாள். சரித்து முடித்ததும் குடத்தை அங்கேயே வைத்துவிட்டு பின்பக்கமாகத் திரும்புகையில் "எங்கே போகிறாய், மாமா இல்லையா?" என்று அதட்டலாகக் கேட்டான் தாமோதரம்.

"அப்பா தம்பலகாமம் போயிற்றார், நில்லுங்க வாறன்" என்று நாணிக் கொண்டே பின்பக்கமாகப் போனாள் சௌந்தரம்.

(i) சௌந்தரத்தின் தந்தையது செல்வச்செழிப்பு இங்கு எவ்வாறு புலப்படுத்தப்பட்டுள்ளது?

(ii) வீட்டுச் சூழலின் நேர்த்தி இங்கு விவரிக்கப்பட்டுள்ளவாற்றை விளக்குக.

(iii) இப்பகுதியிலே கையாளப்பட்டுள்ள உவமை, உருவக அணிகளை இனங்கண்டு விளக்குக.

(iv) தாமோதரத்தைக் கண்டதும், சௌந்தரத்தின் இயல்பான நடத்தையில் ஏற்பட்ட மாற்றம், நுட்பமாகச் சித்திரிக்கப்பட்டுள்ளவாற்றை விளக்குக.

(4 × 4 = 16 புள்ளிகள்)

## பகுதி II

3. **திருக்குறள் அறிவுடைமை** என்ற அதிகாரத்தை அடிப்படையாகக் கொண்டு பின்வருவனவற்றை விளக்குக.

(அ) அறிவின் சிறப்பு

(ஆ) அறிவின் இலக்கணம்

(இ) அறிவுடையாரது இலக்கணம்

(ஈ) அறிவுடையாரது சிறப்பு

(20 புள்ளிகள்)

4. **கம்பராமாயணம் குகப்படலத்தில்**, பரதனுக்கு, குகனைப் பற்றிச் சுமந்திரன் கூறுவது முதலாக, குகனுடன் பரதன் உரையாடத் தொடங்கியது வரையான பகுதியை அடிப்படையாகக் கொண்டு பின்வருவனவற்றை விளக்குக.

(அ) குகன் பற்றிய சுமந்திரனின் அபிப்பிராயம் 24, 25, 24.

(ஆ) குகனைக் காண்பதில், பரதன் ஆர்வங் கொண்டவாறு

(இ) பரதனின் தோற்றமும், அது கண்ட குகனின் மனமாற்றமும்

(ஈ) பரதனதும் குகனதும் சந்திப்பு நிகழ்ந்தவாறு

(20 புள்ளிகள்)

5. **கூத்து** என்ற சிறுகதையை அடிப்படையாகக் கொண்டு, பின்வருவனவற்றை விளக்குக.

(அ) நாகாத்தை மீது சரவணமுத்து கொண்டுள்ள ஈடுபாடு

(ஆ) அக்காலத்துக் கூத்து நடைமுறைகள்

(இ) கிராமியச் சூழலைச் சித்திரிப்பதில் ஆசிரியர் காட்டும் திறன்

(20 புள்ளிகள்)

6. சுவாமி விபுலாநந்தரின், **தமிழ்த் தொண்டு** என்ற கட்டுரையை அடிப்படையாகக் கொண்டு பின்வருவனவற்றை விளக்குக.

(அ) தமிழ் மொழியின் சிறப்பு

(ஆ) பாரதிமீது ஆசிரியர் கொண்டுள்ள ஈடுபாடு

(இ) பிறமொழி நூல்களைத் தமிழுக்கு மொழிபெயர்ப்பதில் ஆசிரியருக்குள்ள ஆர்வம்

(20 புள்ளிகள்)



Downloaded from 'Past Papers Wiki' - Most Extensive Wikipedia of Past Papers!

7. நீலாவணனின் **தொண்டு** என்ற கவிதையை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் விடயங்கள் குறித்துக் கருத்துரைக்குக.

(அ) கவிஞரின் சமூக விமர்சன நோக்கு

(ஆ) அதனை வெளிப்படுத்துவதற்கு விலங்குகளின் இயல்பான நடத்தைகளைக் கையாளும் விதம்

(இ) சூழலைக் காட்சிப்படுத்தும் திறன்

(20 புள்ளிகள்)

8. பின்வருவனவற்றுள் எவையேனும் **இரண்டினை** விளக்குக.

(அ) அணிகளைப் பொருத்தமுறக் கையாள்வதில் **தேம்பாவணி** ஆசிரியர் காட்டும் திறன்

(ஆ) **காரணமாலை** ஆசிரியர் சேகுத்தம்பிப் புலவரின் வர்ணனைத் திறன்

(இ) பேராசிரியர் அ. சீனிவாசராகவனின் **இலக்கிய விமர்சனம்** கட்டுரையில் நல்ல விமர்சனம் என்று அவர் கருதுவது

(ஈ) **ஒரு வெண்மணல் கிராமம் காத்துக் கொண்டிருக்கிறது** என்ற நாவலில், தாமோதரத்திற்கும் அவனது தமையன் நாகேந்திரனுக்கும் இடையிலான பரஸ்பர அன்பு

(உ) **தேர்** சிறுகதையில் குமாரசுவாமி எனும் பாத்திரத்தின் குணவியல்புகள்

(20 புள்ளிகள்)

* * *

PAST PAPERS WIKI
WWW.PastPapers.WiKi
Downloaded from 'Past Papers Wiki' - Most Extensive Wikipedia of Past Papers!

PARCEL NO
www.LOL.LK

LOL.lk
BookStore

# විභාග ඉලක්ක
# පහසුවෙන් ජයගන්න

ඕනෑම පොතක් ඉක්මනින්
නිවසටම ගෙන්වා ගන්න






කෙටි සටහන් | පසුගිය ප්‍රශ්න පත්‍ර | වැඩ පොත් සඟරා | O/L ප්‍රශ්න පත්‍ර |
A/L ප්‍රශ්න පත්‍ර | අනුමාන ප්‍රශ්න පත්‍ර | අතිරේක කියවීම් පොත් |
School Book ගුරු අතපොත්

PADANAMA PUBLICATION
pesuru Prakashana Private Ltd.
Akura Pilot
සමනල දැනුම
සතර

පෙර පාසලේ සිට උසස් පෙළ දක්වා සියළුම ප්‍රශ්න පත්‍ර,
කෙටි සටහන්, වැඩ පොත්, අතිරේක කියවීම් පොත්, සඟරා

**සිංහල සහ ඉංග්‍රීසි මාධ්‍යයෙන් ගෙදරටම ගෙන්වා ගැනීමට**

www.LOL.lk වෙබ් අඩවිය වෙත යන්න